முருகப்பெருமான் துணை

**மகான் பதஞ்சலியார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.03.2024**, வெள்ளிக்கிழமை

1. பிரணவ ராஜனே அரங்கா
புண்ணிய பலம்கொண்ட தேசிகா
சரவணச் சுடரேற்றி அருளும்
சற்குருவே ஞான தேசிகா
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது சேல்திங்கள்
அறிவிக்க ஈரானதிகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 02 ம் நாள், 15.03.2024, வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் பதஞ்சலியார் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமின்றி ஞான மக்களாக
சுத்தநெறி வழி உலகோர் தேற
4. தேறவே ஜீவதயவு கூட்டி
தேசிகன் ஞானம் அருளிவர
அறமாகவே ஏற்று மக்கள்
அடிபணிந்து தொடர்ந்து வர
5. வருகவே அவரவர் வாழ்வில்
வஞ்சம் சூழ்ச்சி வினை விலகி
தருகின்ற குணமும் தயவும்
தரும சிந்தையும் பெருகியே
6. பெருகியே கருமவினை வெல்லும்
பெருந்தர்மமாகச் செய்து
முருகப்பெருமானும் இறங்கி அருள
முழுமையான சக்திதனை அடைவர்
7. அடையவே அனைத்து மக்களும்
அரங்கன் தொடர்பு வழி
தடையற தருமஞான வழி
தானாக முன்னேற்றம் கண்டு

8. கண்டுமே தீவினை களைந்து
கலியில் ஞானிகள் ஆகமாற்றம்
தொண்டு வகையே யாவரும்
துரிதகதி கண்டு உயர்வர்

9. உயர்வுடனே உண்மை கொண்ட
உயர்ஞானம் சுத்த நெறி
தயவுநெறி நிலைத்து நிற்க
தரணியோர் சன்மார்க்கவாதிகளாக

10. ஆகவே சக்தி கூடியே
அரங்கன் வழி ஞானிகளாக
செகமெங்கும் மாற்றம் தனை
சித்திகளாகவே புரிவர்

11. புரியவே புண்ணிய பாரதம் முதல்
பூவுலகமெங்கும் மாற்றம்
தெரியவரும் ஞான ஆட்சிகாலமாக
தெரிவித்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–